251—

உப்பிலியாபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

***34371**—திரு.வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், புதக்கால் கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.40

திரு.வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். சூரியனைச் சுட்டு எரிக்கும் சந்திரனாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், ஊதக்கால் கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்க மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதுக்கும் குறையாது தொழில் முனைவோர் முன் வந்தார்களேயானால் அதைப் பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.